உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சணமங்கலம் கிராமத்தில் அதிகளவிலே கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கருத்திலேகொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் முதலிலே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூரில் 1970-ல் ஆரம்பிக்கப்பட்ட கால்நடை மருந்தகம் இன்றளவும் தரம் உயர்த்தப்படாமல் அப்படியே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மணச்சநல்லூர் கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தரமுயர்த்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

தென்னை ஆராய்ச்சி மையம்

***27161—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 பிப்ரவரி 13]

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை விவசாயம் செய்யப்பட்டு, ஆண்டுதோறும் சுமார் 53 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகள் மூலமாக தென்னை நார்க் கழிவுகள் மதிப்புக் கூட்டப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இம்மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிராக தென்னை இருக்கிறது.*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

நிலமற்ற ஏழைப் பெண்கள் மறைமுகமாக தென்னைப் பயிரை நம்பியுள்ளனர். அதாவது, இம்மாவட்டப் பெண்கள், தென்னை ஓலையைப் பின்னி விற்றும், ஈர்க்குகளை விற்றும் வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்நிலையில், இம்மாவட்டத்தில் தற்போது தென்னைப் பயிரை பல்வேறு நோய்கள் மற்றும் பூச்சிகள் தாக்கி மகசூல் இழப்பு ஏற்படுகிறது. முக்கியமாக வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில், பக்கத்து மாநிலமான கேரளாவிலிருந்து வாடல் நோய் என்னும் கொடிய நோய் பரவி, தென்னை மரங்களைத் தீவிரமாகத் தாக்கி வருகிறது. இதனால் தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது. இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும்

[2019 பிப்ரவரி 13

தேங்காய் கொப்பரைகள் உலகத் தரம் வாய்ந்தவை. ஆனால், தற்போது தென்னைப் பயிர், பல்வேறு நோய்த் தாக்குதல்களுக்கு உள்ளாவதால், இம்மாவட்டத்தில் விளையும் தேங்காய்களின் தரம் கெட்டுவிடுமோ என்ற ஐயம் உள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் இருந்தாலும், இம்மாவட்ட சீதோஷ்ண நிலை, மற்ற மாவட்டங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. சீதோஷ்ண நிலைக்கேற்ப தென்னையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து விவசாயிகளுக்கு வழங்கினால் மட்டுமே இம்மாவட்டத்தில் தென்னை மரங்களையும், தென்னை விவசாயிகளையும் காப்பாற்ற முடியும். புதிய ஆராய்ச்சிகள்மூலம் தென்னை பயிரிடப்படும் பரப்பை அதிகரிக்கச் செய்ய வாய்ப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல், உற்பத்தியை இரு மடங்காகப் பெருக்கி, மதிப்புக் கூட்டுதலில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக உயர்த்துவதற்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தென்னை ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 39 ஆராய்ச்சி நிலையங்களில், அப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கென ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 14 வேளாண் அறிவியல் நிலையங்கள்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் தேவைக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில் தரமான தென்னங்கன்றுகள் மற்றும் வேளாண்மை பற்றிய ஆலோசனைகளுக்கு தோவாளை கிராமத்தில் மலரியல் ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரத்தில் நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்

TRUTH ALONE TRIUMPHS

2019 பிப்ரவரி 13]

அறிவியல் நிலையம் ஆகியவை வேளாண் பெருமக்களுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகின்றன. மேலும், வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கன்னியாகுமரிக்கு அருகில் புத்தளம் கிராமத்தில், அரசு தென்னை நாற்றுப் பண்ணையும், தென்தாமரைக்குளம் கிராமத்தில் தென்னை ஒட்டு சேர்க்கும் மையமும் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஆண்டிற்கு சுமார் 45 ஆயிரம் தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் பொள்ளாச்சிக்கு அருகிலுள்ள ஆழியார் நகர் மற்றும் தஞ்சை மாவட்டம், வேப்பங்குளம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி மையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் என்பது சென்னைக்கு அடுத்தபடியாக 92 விழுக்காடு படித்த மக்களைக் கொண்ட மாவட்டம். இங்கே விவசாயிகள் அதிகப்படியாக இருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை ஆராய்ச்சி மையம், நெல் ஆராய்ச்சி மையம், மலர் வணிக ஆராய்ச்சி மையம்,* Krishi Vigyan Kendra *நிலையம்* (KVK) *ஆகியவை மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. இவை எல்லாம் இருக்கின்ற காலக்கட்டத்தில், இவை அனைத்தையும் ஒருங்கிணைக்கக்கூடிய அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்புக் கல்லூரிகள், அதாவது அரசுக் கல்லூரிகள் மொத்தம் 14 கல்லூரிகளும், அதனுடைய இணைப்புக் கல்லூரிகளாக 27 கல்லூரிகளும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இவை அதிகமான அளவில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டமான கன்னியாகுமரிக்கு வேளாண்மைக் கல்லூரி தேவை என்று அவர் கேட்டிருக்கிறார். தேவை இருக்கிறதா என்பதை அறிந்து அதன்மூலம் பக்கத்து மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் பயன்படுமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் சட்டப் பேரவைத் தொகுதி மற்றும் வேதாரண்யம் பகுதிகளிலே கஜா புயலால் பாதிக்கப்பட்டு, தென்னை மரங்கள் எல்லாம் அடியோடு அழிந்துவிட்டன. அங்குள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலமாக இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடூரமான கஜா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் விவசாயிகளுக்குத் தேவையான தென்னங்கன்றுகளை அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*